# இறைதூதன்

## Messenger of God


UNIVERSITY OF JAFFNA LIBRARY
09 DEC 1999
PERIODICALS DIVISION

**இம்மாதச் செய்தி**

மனிதன் பிறக்கும்போது நல்ல தீய குணங்கள் இன்றித்தான் பிறக்கிறான். நாளடைவில் உட்கொள்ளும் உணவுவகை, சுற்றுப்புறச்சூழல், தாம் தொடர்பு கொள்ளும் மனிதர்கள் இவைகளால் பாதிக்கப் படுவதால் குணங்கள் வளர்கிறது

செய்திக் கட்டுரை
3ம். பக்கம்

சர்வமதப் பத்திரிகை
ஐப்பசி 1998
முரசு 7

மாதம் ஒரு முரசு
விலை ரூபா 10/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர் கருத்து

## மிக அற்புதமான முயற்சி

அன்பான இறை தூதனே,

அன்பு என்னும் பாதையை அழகாகவே அமைத்து, அப்பாதை வழியே இன, மொழி, மதம் என வேறுபட்டுள்ள மக்களை ஒன்று சேர அணைத்துச் செல்ல முற்படும் உனது முயற்சி மிக அற்புதமானது. ஒன்றே குலம் ஒருவனே தேவன் இதனை நன்றே புரிந்து கொண்டால் இவ்வுலகம் நமதே. உன் சேவை தொடரவும் உனது முயற்சி வெற்றியடையவும் எமது உளம் அன்பு வழியிலே நின்று இறையருளை நாடவும் என் நல் வாழ்த்துக்கள்.

மார்க்கண்டு மீனலோசனி
நவாலி

## வாழ்வுக்கு அவசியம்

தாங்கள் வெளியிட்ட இறை தூதன் பத்திரிகையை வாசித்து மிகவும் பயனடைந்தேன். இப்படிப்பட்ட பத்திரிகை எங்களின் வாழ்வுக்கு அவசியம் எனவே அது வளர்ச்சியடைய நான் உங்களுக்கு கவிதை. கட்டுரை ஆகியவற்றை அனுப்புகிறேன்»

இறை தூதன் வாசகி
சி. சிவகௌமினி
வட்டுக்கோட்டை

## மனச்சாந்தியும் நிம்மதியும் பெற்றேன்

அன்பையே தனது உருவமாகக் கொண்டு மனித சமுத்திரத்தின் மேல் வைத்த அன்பினால் அவர்களைக் காப்பதற்காக பரம் பொருளான பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா இப் பூமிக்கு வந்திருக்கிறார்.

இவரைப் பற்றி இன்னும் அறியாமல் எத்தனையோ மக்கள் இருக்கிறார்கள். எத்தனையோ மக்கள் தெரிந்தும் நம்பிக்கை அற்றவர்களாக இவர் ஒரு சாதாரண மனிதர் என்று நினைக்கின்றார்கள்.

உண்மையிலே இவரது அன்பில் குளித்தவர்களுக்குத் தான் தெரியும், அவரது அன்பு எல்லையில்லாதது. அன்பே உருவானவர். அன்பு என்றால் என்ன என்று இவரிடம் இருந்தே கற்றுத் தெரிந்து கொண்டேன்.

எனது இதயம் எவ்வளவோ மனச்சஞ்சலத்தினால் தாக்கமடைந்து சிதறிய வண்ணம் இருந்தது. எப்பொழுது இவரது திருவாய் மொழி அன்பு வார்த்தைகள் உள்ள ஒரு சிறிய புத்தகம் படித்தேனோ அன்றில் இருந்தே அமைதியைத் தேடித் திரிந்த நான் நிம்மதியைப் பெற்றேன்.

அவரது அன்பால் சாயி நிலையத்திற்குச் சென்று வியாழன் பஜனை பூஜைகளில் பங்கு கொண்டு மனச் சாந்தியும் நிம்மதியும் பெற்றேன்.

சாய்ராமா..! உனது புகழ் கருணை அன்பை பற்றி எழுதுவதற்கு காலங்களும் நேரங்களும் முடிந்து விடும். உன கருணை எழுதி முடியாது

சாயி லதா

# தூதுவன் கருத்து

## என்றும் புனிதமாக வாழ்வோம்

சாய்ராம்...!

ஒவ்வொரு மாதமும் விழாக்களும் பண்டிகைகளும் வந்த வண்ணமே இருக்கின்றன. நாமும் விடாது எல்லாவற்றையும் கொண்டாடிக் கொண்டு தான் இருக்கின்றோம். ஆனால் இவற்றின் உள் அர்த்தத்தை புரிந்து கொண்டு தான் கொண்டாடுகிறோமா? என்றால்... இல்லை... என்று தான் சொல்ல வேண்டும்.

வெறும் வேடிக்கை கேளிக்கைகளிலும் விதவித உணவு உண்பதிலும், விடிய விடிய சினிமாப் படங்களைப் போட்டுப் பார்ப்பதிலுமே இவ்விழாக்களின் முக்கிய நோக்கமாக மாற்றிவிட்டார்கள் மக்களின் பெரும் பாலானவர்கள்.

இன்னும் பலர், இத்தகைய பண்டிகை, விழாக்காலங்களில் தீயனவற்றை விலக்கி, புனிதமான நூல்கள் படிப்பதிலும் மந்திரங்கள், பஜனை, பூஜைகள், விரதங்கள் என்று புனிதமாக நாட்களைக் கழித்தவர்கள். உதாரணமாக நவராத்திரி நாட்களையும் புனிதமாகக் கழித்தவர்கள் 11ம் நாள் என்ன செய்கிறார்கள்? தங்களுடைய பழைய வாழ்கைக்கு திரும்புகிறார்கள்.

எப்படி ?

கவிழ்த்து வைத்த மாமிசச் சட்டிகள் எல்லாம் நிமிர்தப்படுகின்றன. சிகரட், மது, சினிமா, வீண் அரட்டை அடித்தல் போன்ற எத்தனையோ தீச் செயல்களை நிறுத்திவைத்து பின் பண்டிகை விழாக் காலங்கள் முடிந்ததும் திரும்பவும் ஆரம்பிக்கிறார்கள்.

இப்படிப்பட்ட விரதங்கள் பூஜைகளினால் நாம் பெற்ற பயன் என்ன..? 10 நாட்களாக இறைவனை வேண்டிப் பெற்ற புனித சக்திகள் எல்லாம் அடுத்து வரும் 20 நாட்களில் செய்யும் செயல்களினால் அடித்துச் செல்லப்படுகிறது.

இதனால் மனச் சாந்தி சமாதானத்தை இழந்து சுற்றாடல் சூழலையும் மாசு படுத்தி விடுகிறோம் என்ற உண்மையை அவர்கள் விளங்கிக் கொள்வதில்லை.

துர்க்கையினால் மகிடாசுரனும். கிருஷ்ணரினால் நரகாசுரனும், முருகப் பெருமானினால் சூரனும் அழிக்கப்பட்டனர். உண்மையில் இவர்கள் எல்லாம் அழிக்கப்பட வேண்டிய அசுரர்களா...? இல்லை

தங்கள் நற்குணங்களை வளர்க்காமல் தீய அசுர குணங்களை வளர்த்து தங்களைத் தாங்களே அழித்துக் கொண்ட சாதாரண மானிடர்கள் தான் இறக்கும் போது தங்கள் தவறுகளை உணர்ந்து இறை சிந்தனையுடன் புனிதமான வழியில் வாழுங்கள் என வேண்டி இறையடி சேர்ந்தவர்கள்.

இப்படியான புராண உண்மைகளைத் தெரிந்து கொண்டும் தீய குணங்களை வளர்த்து தீய செயல்களைச் செய்வோமானால் எங்களை அழிக்க வேறு ஒருவரும் தேவையில்லை. எங்கள் எண்ணங்களும் செயல்களுமே ஆயுதங்கள். அணுக்குண்டுகள், ஆகமாறி அழித்து விடும் என்ற உண்மையை நாம் விளங்கிக்கொண்டு தூய்மையான முறையில் இனி மேலாவது வாழப்பழகுவோம்.

பண்டிகைக் காலங்களில் எப்படிப் புனிதத்துவத்தை பேணி நடந்தோமோ அப்படியே மிகுதி நாட்களையும் கழிப்போமானால் எம் வாழ்வில் அமைதி சாந்தி சுபீட்சம் நிச்சயமாக ஏற்படும். அதாவது எங்கள் வாழ்க்கையே வழிபாடாக விளங்கவேண்டும்.

ஜெய் சாய்ராம்

## ஒரு தாய் செய்த தவறு

- பகவான் பாபா -

சந்தைக்கு செல்லும் போதெல்லாம் தாய் ஒருத்தி தன் பிள்ளையைத் தோளில சுமந்து செல்வது வழக்கம். அங்கே கூடை நிறைய வாழைப் பழங்களைச் சுமந்து கொண்டு ஒரு பெண் கடந்து சென்றாள்.

அவளது கூடையில் இருந்து ஒரு வாழைப்பழத்தை எடுத்துப் பையன் சாப்பிட ஆரம்பித்தான். தாய் அதைக் கவனித்து விட்டாள். உடனே மகன், ''வாழைப்பழக் கூடைக்காரி கடந்து சென்ற போது சாமர்த்தியமாகப் பழத்தை எடுத்தேன்'' என மகன் விளக்கினான்,

அவனது திறமையைச் சுறு சுறுப்பைப் பாராட்டிப் பேசினாள் அம்மா அது சிறு சிறு திருட்டுக்களைச் செய்யவும் மற்றவர்களுடைய பொக்கட்டில் இருந்து பணம் திருடவும் தூண்டுதலாக அமைந்தது.

பையன் வளர்ந்து ஆளான பிறகு உண்மையிலேயே வீடுகளை உடைக்கும் திருடனாகவும் கொள்ளை அடிப்பவனாகவும் மாறிவிட்டான். அப்படி ஒருமுறை கொள்ளையடிக்கும் போது கொலையும் செய்துவிட்டான். அதனால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டான்.

தூக்கில் போடுவதற்கு முன் தனது தாயைப் பார்க்க விரும்புவதாகக் கூறினான அழுது கொண்டும் ஒப்பாரி வைத்துக்கொண்டும் இருந்த தாயை அவன் முன் கொண்டு வந்து நிறுத்தினர்.

மகனது தலைவிதியை எண்ணித் தாய் தேம்பித் தேம்பி அழுதாள். மகன் தாயை தன் அருகில் வரும்படி அழைத்தான். வந்தவுடன், திடீரென அவள் குரல்வளையை நெருங்க ஆரம்பித்தான் ஆனால் காவலர்கள் அவனைத் தடுத்து விட்டனர் அவர்களிடம் மகன்,

''இவளுக்குத்தான் இந்தத் தண்டனை தரப்படவேண்டும். ஏனெனில் இந்த அவல நிலைக்கு என்னை ஆளாக்கியவள் இவள் தான். நான் இரண்டு வயதுப் பாலகனாக இருந்தபோது அந்த வாழைப்பழத்தை நான் திருடியதைப் பாராட்டியதற்குப் பதிலாகக் கண்டித்திருந்தால் நான் இந்தத் தீய வழியில் இறங்கி இருக்க மாட்டேன்'' என்று கூறினான்.

அமைதியே நல்ல பாதுகாப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தீய குணங்களை அகற்றி நல்ல குணங்களை வளர்ப்பதே தீபாவளியின் குறிக்கோள்

- பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா -

## நல்ல, தீய குணங்களுக்குரிய காரணங்கள்

தெய்வீக ஆன்மாவின் வடிவங்களே ! மனிதர்கள பிறக்கும்போது எவ்வித தீயகுணங்களோ நற்குணங்களோ இன்றித் தான் பிறக்கிறார்கள் ஆனால் அவர்கள் உட்கொள்ளும் உணவு வகை மாறுதல்களாலும், சுற்றுப்புறச் சூழல்களாலும் மற்றும் தொடர்பு கொள்ளுய மனிதர்களாலும் பாதிக்கப்படுவதால் நல்ல, தீய குணங்கள் வளர்கின்றன. சுற்றத்தாராலும் நண்பர்களாலும் அகங்காரம் அபிமானம் போன்ற பறறுக்கள் வளர்கின்றன.

மேலும், விருப்பு வெறுப்பு, கோபதாபம் போன்ற உணர்வுகள் அதிகமாக பாதிக்கத் தொடங்குகின்றன. தனக்கு மிஞ்சியவர் எவரும் இல்லை, தானே தலைசிறந்தவர் என்னும கா்வ உணர்வு மனிதரிடம் தோன்றுகிறது.

## பாலில் நீர் கலந்தது போல...

பாலில் அசுத்மான தண்ணீர் கலந்து விட்டால் அதை நீக்குவது மந்திரத்தாலோ அல்லது எந்த யந்திரத்தாலோ. எந்தத் தந்திரத்தாலோ சாத்தியமாகாது அதேபோல தூய்மையான பால் போன்ற உள்ளத்தில் தீய உணர்வுகள் கலந்துவிட்டால் அவைகளை நீக்க எவ்வளவோ சாதனைகள் செய்து வருகின்றனர் யக்ஞம் யாகம் தியானம், ஜபம் போன்றவைகளால் மனதுக்கு திருப்தி கிட்டுமேயன்றி தூய்மையான உள்ளத்தை இவைகளால் மீட்க இயலாது.

## மீண்டும் தூய்மை ஒளிபெற

தீய உணர்வுகளை தெய்வீகப் பிரேமை என்னும் தீயில் இட்டுத்தான் நீக்க இயலும் இதனையே ''சமஸ்காரம்'' அதாவது பரிசுத்தப் படுத்துதல் என்று கூறுவர். சமஸ்காரத்தினால் இதயம் மீண்டும் அதன் தூய்மை ஒளியைப் பெற்றுப் பிரகாசிக்கும்.

சூரியனுடைய கிரணங்கள் எவ்வளவு திட்சண்யமாக அனல் போல் காய்ந்தாலும் அவைகளால் ஒரு பஞ்சு உருண்டையை எரிக்க முடியாது ஆனால் நடுவில் ஒரு ''குவிலென்ஸ்'' (LENS) வைத்து அதன் மூலமாக கிரணங்களைப் புகவிட்டால் பஞ்சு தீப்பற்றி எரிந்துவிடும்

அதேபோல புத்தி என்ற சூரிய கிரணங்களை தெய்வீகப் பிரேமை என்றும் ''லென்ஸ்'' மூலமாக பிரமயாகம் செய்தால் தான் தீய உணர்வுகள் இதயத்திலிருந்து அழியும் ஆன்மாபிமானம் (ஆன்மீகநாட்டம்) சுவர்க்க மென்றும், தேகாபிமானம் நரகமென்றும் நன்குணர்தல் வேண்டும்.

ஆனால் மனிதன் ஆன்மீகநாட்டம் சற்றும் இல்லாமல் சரீரத்தின் மீதே நாட்டத்தை வளர்த்து வருகிறான். இக்காலத்தில் எந்த ஒரு மனிதரும் தூய்மையான மேன்மையான எண்ணங்களை வளர்ப்பதில்லை. ஆசைகளுக்கு தம்மை அடிமையாக்கி வாழ்நாட்களை வீணடித்து வருகின்றனர் மனிதர்கள்.

மனிதன் மாதவனிடம் இருந்து வந்தவனே அப்படி இருந்தும் அவனிடம் மனிதத் தன்மை கூட காணப்படவில்லையே. ஏன் ? இது மாயையின் திருவிளையாடலே. மாயை என்பது பிரமையே, ''பிரம்மம்'' என்பது தெய்வம் பிரமை உள்ள வரையில் பிரமத்தை உணர முடியாது.

## ஒளித்திருநாள் தீபாவளி

தீபாவளித்திருநாளில் ஒரு தீபத்தில்இருந்து பல விளக்குகளை ஏற்றி வைக்கிறோம். மற்ற விளக்குகளை ஒளி வீசச்செய்ய உதவும் அந்த முதல் விளக்கின் ஒளியே பரமாத்மா அதனால் ஒளிபெறும் மற்ற விளக்குகள் ஜீவாத்மாக்கள் ஆகும்

ஒரே மேலான ஒளியில் இருந்து மற்ற விளக்குகள் யாவும் ஒளிவீசத் தொடங்குவது போல் மனிதர்கள் ஜீவராசிகள் எல்லாவற்றுக்கும் பரம்பொருளே ஆதார ஒளியாகும் இந்த உண்மையை உணர்த்தும் வகையில் தான் ஒளி விளக்குத் திருநாளாக தீபாவளி கொண்டாடப்படுகிறது.

ஒவ்வொரு திருநாளுக்கும் இம்மாதிரியாகவே ஒரு புனிதமான ஆன்மீக அடிப்படை நோக்கம் உண்டு இந்த அடிப்படையை மறந்து வெளிப்புறக் கொணடாட்டங்களிலும் விருந்துண்பதிலும் மற்றக் களியாட்டங்களிலும் மனிதர்கள ஈடுபடுகின்றனர். இது அர்த்தமற்ற செயலாகும்.

## இளமைப் பருவத்தில்

இளமைப் பருவத்தில் மனிதர்களிடம் மமதை அதிகமாகக் காணப்படுகிறது. பிறரைச் துச்சமாக மதிக்கும் மனப்பான்மை வளர்ந்து வருகிறது தேகத்தில் பலம் இருக்கும் வரை மமதை அதிகமாக உள்ளது இதனால் இல்லாததை இருப்பதாகவும் பொய்யை மெய்யாகவும் கருதும் மனப்பாங்குஅதிகமாக காணப்படுகிறது.

அகங்காரம் என்பது கல்வி அறிவினால் பெறுவது அல்ல, தனக்குள்ளே இருந்து தானே வளர்த்துக் கொள்வதே அகங்காரம் இதனால் மனிதனிடம் அரக்கத்தன்மை அதிகமாகி அசுரனாகிவிடும் நிலையை எட்டுகிறான்.

இன்று நரன் என்னும் மனிதன் நரகத்தை நோக்கிச் சென்றுகொண்டு இருக்கிறான். நரகன் அசுரன், ஆன்மாவே தெய்வத்துவம் தெய்வத்துவம் ஒவ்வொருவரிடமும் இருப்பினும் இதை உணர்வது கடினம். இதை உணர சித்தத்தை சுத்தப்படுத்த வேண்டும்.

## தெய்வத் தன்மை ஒளிவீச

மனித வாழ்வு ஆன்மா, மனது, சரீரம் மூன்றையும் சார்ந்தது மனதைப் பின் பற்றுபவன் அசுரன். சரீரத்தை பின்பற்றுபவன் மிருகத் தன்மை உடையவன். ஆன்மா, சரீரம், மனது மூன்றையும் பின்பற்றுபவன் மனிதன். ஆத்மாவை மட்டும் நாடுபவனே தெய்வத்தன்மை ஒளி வீசுபவன்.

எனவே எவர் மிருகத்தன்மை உடையவர் எவர் அசுரத்தன்மை உள்ளவர், எவர் மனிதத் தன்மை உள்ளவர் எவர் தெய்வத் தன்மை உள்ளவர் என்பதை தமக்குத்தாமே சுயசோதனை செய்து புரிந்து கொள்ளவேண்டியது அவர். அவர் கடமையாகும. இவை நான்கும் மனிதனிடம் உள்ள தன்மைகளே.

ஆகவே தீவிர முயற்சிகள் எடுத்து மனிதத் தன்மையை வளர்த்து தெய்வத்தன்மையை ஒளிவீசச் செய்திடல் வேண்டும்

## நரகாசுரன் சக்தி குன்ற கிருஷ்ணர் செய்த உபாயம்

உலக வழக்கப்படி இன்று நரகாசுரன் என்ற அரக்கனை வதைத்த தினமாகும். நரகன் என்ற அரக்கன் பல பெண்களைத் தொந்தரவு செய்து, எண்ணற்ற மக்களைப் பயமுறுத்தி சிறைப்படுத்தி, துன்புறுத்தி வந்தான்.

விருப்பு வெறுப்பையே தனது அடிப்படையாகக் கொண்டு தேகத்தினால் அடையும் சிற்றின்ப சுகமே நிரந்தர சுகமென்று இயங்கி தனது வாழ்நாட்களை வீண் நாட்களாக்கி வந்தான்.

11ம் பக்கம் பார்க்க

இந்த உடல் எமக்கு அளிக்கப்படடது தெங்வீக அருளைப் பெறுவதற்கே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சத்யபாமாவின் அகங்கார அசூயையை அழித்து, ருக்மிணியின் பக்தியைப் போற்றிய ஸ்ரீ கிருஷ்ணன்

- புராணக்கதை -



இது உலக சம்பந்தமான கதை. சத்ய பாமா எப்படிப்பட்டவள்..? அவள் அசூயை பொறாமை நிறைந்தவள். கிருஷ்ணர் வேறு யாரையாவது நேசித்தாலும் வேறு எங்கு உணவு புசித்தாலும் சத்யபாமாவுக்கு அசூயை ஏற்பட்டு விடும்.

தனக்கு மட்டுமே உரியவராக தனது கணவனாக கிருஷ்ணன் இருக்க 'வேண்டும் என்பதே பாமாவின் குறிக்கோள்.

பொறாமை என்பது வெளியே புலப்படாது வெளியே காணமுடியாமல் மரத்தின் அடி வேரையே தாக்கி நாசமடித்து விடும் வேர்ப்புழு போன்றதே இந்த பொறாமை என்ற குணம். உள்ளேயே புகைந்து கொண்டே இருந்து ஒருவரின் அமைதியையே நாசமாக்கி விடும் தன்மை கொண்டது சத்யபாமா பொறாமையின் வடிவமானவள்.

> பக்தியுடன் எவன், ஒருவன் எனக்கு இலையோ, மலரோ, கனியோ, நீரோ, அளிக்கிறானோ, தூயமனம் கொண்ட அவனது பக்தியின் பொருட்டு, அதை ஏற்றுக் கொண்டு அருந்துகிறேன்.
>
> - பகவத்கீதை -

அவளிடம் காணப்பட்ட மற்றொரு விதமான அசூசை என்னவெனில் கிருஷ்ணரிடம் தீவிரமான பக்தி கொண்ட ராதாவைப் பற்றி பேச்செடுத்தாலே அவளுக்கு சொல்லொணாத கோபம் எழும். அந்த பெயரைக்கூட உச்சரிக்க விரும்பாத சத்யபாமா அவள் பெயரை தலைகீழாக தாரா என்று எழுதி,

''இதை தலைகீழாகப் படித்தால் வரும் பெயருடையவளிடம் தானே சென்று வந்தீர்..? அதனால் தானே இவ்வளவு தாமதம்..? என்று கிருஷ்ணரைக் கேட்பாள்.

இவ்வளவு பொறாமை பாமாவிடம் இருந்தது அதை மாற்ற கிருஷ்ணன் விரும்பினார். ஏனெனில் அவள் கண்ணனின் அர்த்தாங்கி, பாதி உடல்.

நாரதர் தனது இல்லத்திற்கு வந்த போது சத்யபாமா அவரிடம் கிருஷ்ணரை தனக்கே உரியவராக வசப்படுத்த எந்தவிதமான உபாயமானாலும், தவமோ, யாகமோ விரதமோ மற்ற எவ்வகையான நோன்போ ஆனாலும் அதை போதிக்க வேண்டுமெனக் கோரினாள்.

நாரதர் கிருஷ்ணனை நாட, கிருஷ்ணன் ஒரு திட்டத்தைத் தீட்டினார் இதன்படி நாரதர் சத்யபாமாவிடம், ''அம்மா இதற்கு ஒரு விரதம உள்ளது அதன்படி நீ செய்துவிட்டால் கிருஷ்ணன் உனக்கே உரியவராகி விடுவார். செய்யத் தயாரா ? என்று கேட்டார்.

எந்தவிரதமானாலும் பரவாயில்லை நான் செய்யத் தயாராக உள்ளேன். சியமந்தக மணியின் மகிமையால் அன்றாடம் எவ்வளவோ அளவில் தங்கம் தயாராகிவருகிறது. செல்வத்திற்கு குறைவே இல்லை என்றாள். நாரதா அவளிடம்,

மூன்று நாள் விரதமிருந்து பதிபூசை செய்து நான்காவது நாள் கணவனை யாருக்காவது தானம் செய்ய வேண்டும். பிறகு அவரை தராசில் வைத்து எடைக்கு எடை பொன்மணி, செல்வம் வைத்து விட்டால் அவரை மீண்டும் பெற்று அவர் உமக்கே உடையவர் என்று ஆக்கி விடலாம். இதுவே பதிதானத்தின் சிறப்பு என்று கூறினார்.

இதைக் கேட்டு களிப்படைந்த பாமா, இது என்ன பிரமாதம் ? எளிதில் இதைச் சாதித்துவிடலாம் என ஒப்புக்கொண்டாள்.

மூன்று நாள் விரதத்திற்குப் பின்னர் எவருக்கு கிருஷ்ணனைத் தானமாகக் கொடுப்பது?'' என நாரதரிடம் பாமா கேட்டாள் நாரதர்,

''எனக்கே தானமாகத் தரலாமே'' என்றார். அப்படியே நாரதருக்கு தானம் செய்தாள் பிறகு தராசில் கிருஷ்ணனை ஒரு தட்டில் அமரச் செய்து, மறுதட்டில் தன்னிடமுள்ள தங்கம், வைரம் முதலிய நகைகளையும் மற்றும் தங்கக்கட்டிகள் எல்லாவற்றையும் வைத்தாள். தட்டு சிறிதும் இறங்கவில்லை. எல்லா உடமைகளையும் வைத்தாகிவிட்டதே என்ன செய்வது என்று தடுமாறினாள் சத்யபாமா இதற்கு என்ன செய்யலாம் என்று நாரதரிடம் கேட்டாள். நாரதரோ,

''அம்மா பாமா...! இனி இந்தத் துலா பாரத்தை நிறுத்திக்கொள்... நான் கடைத் தெருவுக்குச் சென்று கிருஷ்ணனை விலை பேசி விற்கிறேன். என்றார்,



இதைக் கேட்ட சத்யபாமா எவராவது கிருஷ்ணனை வாங்கி விடுவார்களே என்ற பீதி கொண்டாள். செய்வதறியாது ருக்மிணியிடம் ஓடினாள். ஒரு நாளும் அவள் ருக்மிணியை நாடிச் சென்றதில்லை,

> உத்தவா ! நன்கு கொளுத்தப்பட்ட தீகட்டைகளை எரித்துச் சாமபலாக்கி விடுவது போல என் பால் கொள்ளும் பக்தி பாவங்களை எல்லாம முற்றாக எரித்துவிடும்.
>
> - ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா -

ருக்மிணியின் உள்ளம் தூய்மையானது அவளிடத்தில் எவ்வகையான தீய உணர்வுகளும் இல்லை கிருஷ்ணனை கடைத்தெருவில் விலை பேசி விற்பது என்பதைக் கேட்கவே அவள் மனம் துடித்தது. பாமாவை நோக்கி,

11ம் பக்கம் பார்க்க

பக்தர்களுக்கு பிரியமான பரமாத்மாவாகிய என்னை அன்பாலும் பக்தியாலுமே அடையமுடியும் -ஸ்ரீ கிருஷ்ணர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தரும் அங்குலிமாலாவும்

ஷரவந்தியின் எல்லையிலுள்ள காட்டில் அங்குலிமாலா வசித்து வந்தான். அவன் ஒரு தேர்ந்த வழிப்பறிக் கொள்ளைக்காரன் அப்பக்கம் பயணம் சென்றவர்களையும் தான் தங்கியிருந்த இடத்தை நெருங்கி வந்தவர்களையும் கொள்ளையடித்துக் கொலை செய்தும் வந்தான்.

அவனுக்கு அஞ்சி, மக்கள் அந்த வழியே போவதையே நிறுத்தி விட்டார்கள். இந்த பெருங் கொள்ளைக்காரன், அவர்களது உடமைகளை யெல்லாம் சூறையாடுவதோடல்லாமல், அவர்களுடைய சுண்டு விரல்களை வெட்டியும் வந்தான். அந்த விரல்களை மாலையாகக் கட்டி கழுத்தில் அணிந்திருந்தான் அவன்.

ஒரு நாள் அங்குலிமாலா யாராவது அவ் வழியே வருவார்களா என்று காத்துக் கொண்டிருந்தான். அவன் கட்டி வந்த சுண்டு விரல் மாலையில் மேலும் சில சுண்டு விரல்கள் அவனுக்குத் தேவைப்பட்டன; அப்போது தொலை தூரத்தில் சந்நியாசி ஒருவன் வந்து கொண்டிருப்பதைப் பார்த்தான்.

"ஏய்! சந்நியாசி! அங்கேயே! நில்" என்று அவரை நோக்கி ஓடியபடியே கத்தினான் மூச்சிரைக்க அவரிடம் ஓடினான் அவன். எவ்வளவு விரைவாக ஓடியும் அவரைப் பிடிக்க அவனால் முடியவேயில்லை உடனே,

'ஓடாதே நில் அங்கேயே!,, என்று கோபத்துடன் கத்தினான், அந்த சந்நியாசி வேறு யாருமில்லை புத்த பகவானே அங்ஙனம் வந்து கொண்டிருந்தார், அவர் அமைதியாக "நான் அசையக்கூட இல்லை. நீ தான் ஓடி வருகிறாய்!,, என்று கூறினார்.

"நீ என்ன சொல்கிறாய்?" என்று அவரை நெருங்கி விட்ட அவன் வியப்போடு கேட்டான். "குழந்தாய்! நீ இன்னும் உன் மனதிற்கு அமைதி தேட வேண்டியவனாக இருக்கிறாயே" என்றார் புத்தர் கனிவுடன்.

"ஓ! யாரிவன்? என்னைக் குழந்தை என்று அழைக்கிறானே! அங்ஙனமே என்னை நினைத்துத் தான் சொல்கிறான்? என்று தனக்குள் வியந்து கூறிக்கொண்டான் அந்தத் திருடன் நான் யார் என்று உனக்குத் தெரியுமா? எனக்கு உன அறிவுரை தேவையில்லை எனக்குத் தேவையெல்லாம உன்னுடைய சுண்டு விரல்"

இடி முழக்கம் போன்ற குரலில் இங்ஙனம் புத்தரைக் கேட்டான் திருடன். "அப்படியானால் இதோ! எடுத்துக்கொள் மகனே" என்றவாறு தன் இரு கைகளையும் அவன் எதிரில் நீட்டினார் புத்தர். "உன்னுடைய விரல்களோடு உன் உயிரையும் பறித்து விடுவேன்" என்று மேலும் அச்சுறுத்தினான் அங்குலிமாலா.

"உனக்கு அது மன அமைதியைத் தருமானால் நீ என் உயிரையும் தயக்கமின்றி எடுத்துக் கொள்ளலாம் என்று" பொறுமையாக பதிலளித்தார். புத்தர் அங்குலிமாலா அவன் வாழ்நாளில் அதுவரை அத்தகைய அமைதியான அன்பான ஒருவரை சந்தித்ததே இல்லை அவரது பொறுமையும், சாந்தமும், கனிவும், கருணையும் அவனிடம் ஒரு பெரும் மாற்றத்தை உண்டு பண்ணி விட்டன.

உடனே நெடுஞ் சாண்கிடையாக அவரது கால்களில் பணிந்தான் கண்களில் நீர் சோர "தலைவா! இனி நான் யாரையும் கொல்ல மாட்டேன்" என்று உறுதி கூறினான். புத்தர் அவனை வாரி எடுத்து அணைத்துக் கொண்டார். காட்டை அடுத்திருந்த ஒரு மடத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கிருந்த அநந்தபிண்டகர் என்ற துறவியிடம்" இதோ மற்றுமொரு சகோதரர் அங்குலிமாலா," என்று அறிமுகப்படுத்தி ஒப்படைத்தார்.

அடுத்த நாள் காலையில் ஷ்ரவந்தி நாட்டு மன்னன் அந்த மடத்திற்கு வந்து புத்த பகவானுக்கு தன் வணக்கத்தைத் தெரிவித்தான். அவனைக் கூர்ந்து பார்த்த புத்தர் "நீ ஏதோ ஒரு படையெடுப்புக்கு புறப்படுகிறாய்போல தோன்றுகிறதே,, என்று கேட்டார்.

"ஆம்! ஐயா நான் அங்குலிமாலாவைக் கண்டுபிடித்து உடனடியாக அவனைக் கொன்று விடவே விரும்புகின்றேன்' நான் ஏற்றுச்செல்லும் பணிக்கு தங்கள் மேலான ஆசியைப் பெற்றுப் போகவே இங்கு வந்தேன்" என்றான் மன்னன் பணிவாக.

"ஓ! அரசனே! அங்குலிமாலா தன் கொடூரமான வழியை விட்டு விட்டு, ஒரு துறவியின் வாழ்வை மேற்கொண்டு விட்டானானால அப்போது நீ என்ன செய்வாய்?,, என்று அரசனைக் கேட்டார் புத்தர். "பிரபுவே! இதிலென்ன சந்தேகம் அவனை நான் தலை தாழ்த்தி வணங்குவேன். ஆனால் அங்குலிமாலா ஒரு துறவியாவதை என்னால் கற்பனை செய்து கூடப் பார்க்க முடியவில்லை பிரபு என்று வியந்து கூறினான் அரசன். "வா! வந்து அந்தப் பக்கம் பார்! "அவன் செடிகளுக்கு தண்ணீர் விட்டுக் கொண்டிருக்கிறான்" என்றார் புத்தர் அமைதியாக.

என்ன விந்தை இது! "தெய்வமே! என் உடல் வலிமை மன வலிமை யெல்லாம் பயன்படுத்தியும் அவனை அடக்க முடியாது திணறினேனே; ஆனால் தாங்கள ஒரு விரலைக் கூட அசைக்காமல் அவனை வெற்றி கொண்டு விட்டீர்களே! உயிரினங்களை விரும்பும் கனிந்த இதயமும் அன்புடனும், அமைதியான, பாங்கும் கொண்ட புத்தர் பிரான் நீடூழி வாழ்க! இங்ஙனம் பரவசமாகக் கிளர்ந்து கூறியவனாக அரசன் புத்தர் பிரானின் திருவடிகளில் வீழ்ந்தான்.

## சாக்கடைத் தண்ணீரும் சமுத்திரமும்

சாக்கடைத் தண்ணீர் எவ்வளவு தான் அசுத்தமாக இருந்த போதிலும் சமுத்திரத்தோடு சேரும் பொழுது அந்தச் சாக்கடைத் தண்ணீரோடு சமுத்திர நீர் சேர்ந்து விடாது, காரணம் என்ன? சமுத்திரத்தின் தண்ணீர் அளவற்றதாக இருக்கிறது, சாக்கடைத் தண்ணீர் குறைவாக இருக்கின்றது, அற்பமானது அளவற்றதோடு சேர்ந்து அளவற்றதாகவே மாறிப் போகின்றது, அது போன்றே நாம் நல்லோர் கூட்டத்துடன் சேர்ந்தால், நமது அற்ப குணங்களும் கூட நல்ல குணங்களாக மாறிவிடுகின்றன,

- பாபா -

# தொழுகையும் அதனால் ஏற்படும் நன்மைகளும்



## தொழுகையை எப்படித் தொழ வேண்டும்..?

ஹஜரத் இம்ருனுப்னுல் ஹீஸைல் (றலி) அன்ஹா அவர்கள் கூறுவது. "எனக்கு மூலநோய் இருந்தது அதுபற்றி நாயகம் (ஸல்) அவர்களிடம் தெரிவித்து நான் எப்படித் தொழ வேண்டும்.? என்று கேட்டேன். அதற்கு நபிகள் நாயகம்,

"நிலையில் நின்றவராக நீர் தொழுது கொள்வீராக..! அதற்கு நீர் சக்தி பெறாதிருப்பீரானால் இருப்பில் இருந்தபடி தொழுது கொள்வீராக அதற்கும் நீர் சக்தி பெறாதிருப்பீரானால் பக்கவாட்டில் படுத்தவராக நீர் தொழுவீராக அதற்கும் நீர் சக்தி பெறாதிருப்பீரானால் மல்லாந்து படுத்தவராக நீர் தொழுது கொள்வீராக அல்லாஹ் எந்த ஒரு ஆத்மாவையும் அதன் சக்திக்கு மேல் வருத்தப் படுத்துவதில்லை,, என்று விடையளித்தார்.

## தொழுகையினால் வரும் நன்மைகள்

உடல் நலத்தைப் பாதுகாக்கிறது வியாதிகளைத் தீர்த்துவைக்கிறது. இதயத்துக்கு சக்தி அளிக்கிறது முகத்தை அழகாகவும் ஒளியுள்ளதாகவும் ஆக்குகிறது உடல் உறுப்புகளுக்கு சக்தியை உற்சாகத்தை கொடுக்கிறது சோம்பலைப் போக்குகிறது மனத்தை விரிவு படுத்துகிறது உயிருக்கு உணவாக ஆகிறது உள்ளத்தை பிரகாசமுடையதாய் ஆக்குகிறது இறைவனின் அருட்கொடையைப் பாதுகாக்கிறது.

மேலும் நீங்கள் துண்டம் துண்டமாக வெட்டப்பட்டாலும் நெருப்பிலிட்டு பொசுக்கினாலும் தூக்கில் ஏற்றப்பட்டாலும் எந்த நிலையிலும் இறைவனுக்கு இணை வைக்காதீர்கள் நீங்கள் அறிய எந்தத் தொழுகையையும் விட்டுவிடாதீர்கள் தொழுகையை விட்டவர் தமது மார்க்கத்தை விட்டே நீங்கியவர் ஆவார்.

நல்லோர் சேர்க்கையினால் ஜீவன் முக்தி வாய்க்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிமலர்கள்

## உணவும் பலனும்

உணவு எப்படியோ
உணர்வுகள் அப்படியே
உணர்வுகள் எப்படியோ
எண்ணங்கள் அப்படியே
எண்ணங்கள் எப்படியோ
செயல்கள் அப்படியே
செயல்கள் எப்படியோ
பலன்கள் அப்படியே

- பாபா -

## ஒளி தருவேன்

எண்ணச் சிறகடித்தே – வானில்
எங்கணும் சுற்றிடுவேன். !
கண்ணீர் மழை பொழியும் - துன்பக்
காப்பியம் தீட்டிடுவேன்....!
பங்குல் முகிலினங்கள் - சூழ்ந்த
காரிருள் வையகத்திலே !
செங்கதிர் போலெழுவேன் – பொல்லா.
தீங்கை எரித்திடுவேன்...!
கொட்டும் முரசுடனே. ! வாழ்வில்.
கொடுமை தகர்த்திடவே
வட்ட நிலவினைப் போல் – முன்.
வந்தே ஒளிதருவேன்..!
கடலை போல் எழுந்தே சீறும்
காற்றினைப் போலுலவி
மடமை ஒழித்திடுவேன்.. - புதிய
மாற்றம் விளைத்திடுவேன்...!
மண்ணும் வியப்புறவே - நிற்கும,
மலையில் எதிர் ஒலிக்க.,
வண்ணக் கலையணைத்தும் - மனித
வாழ்வினில் நாட்டிடுவேன்....!
திசைகள் அதிர்ந்திடவே – நல்ல
திருப்பம் நிகழ்ந்திடவே
இசையினைப் பாடிடுவேன்- – வறியோர்.
இன்னலைப் போக்கிடுவேன்....!
உலகம் உயர்ந்திடவே - என்றும்.
உண்மை நிலைத்திடவே
நயங்கள் புரிந்திடுவேன்....! – கவிதை.
நாட்டியம் ஆடிடுவேன்.

- ஜோதிதாசன் -

## தீபங்கள் ஏற்றிடுவோம்

எங்கும் மங்களம் பொங்கிப்
பரவ தீபங்கள் ஏற்றிடுவோம்
இருளைப் போக்கி ஒளியினை
பெருக்க தீபங்கள் ஏற்றிடுவோம்
தீமைகள் எரித்து நன்மைகள்
பொழிய தீபங்கள் ஏற்றிடுவோம்
வறுமை நீங்கி செழுமை பெற்றிட
தீபங்கள் ஏற்றிடுவோம்
ஒன்றே குலம் ஒருவனே தேவனென
தீபங்கள் ஏற்றிடுவோம்
அன்பை நிரப்பி அருளைப் பெற்றிட
தீபங்கள் ஏற்றிடுவோம்
சத்யத்தை வணங்கி தர்மத்தை
வளாக்க தீபங்கள் ஏற்றிடுவோம்
எங்கும் சாந்தி சாந்தி சாந்தியென
தீபங்கள ஏற்றிடுவோம

– சாயிப்பிரியா –

## முக்கிய அறிவித்தல்

சாய்ராம்.! உங்கள் ஆக்கங்கள் எமக்கு வந்தவண்ணம் இருக்கிறது. சந்தோஷம் நீங்கள் எழுதுவது உங்கள் சொந்த ஆக்கங்களாக இருந்தால் யாவும் கற்பனையே. எனவும். வேறு புத்தகங்களில் இருந்து எழுதினால் தொகுப்பு:என அந்தப்புத்தகத்தின் பெயரைக் குறிப்பிடும் படி கேட்டுக் கொள்கிறோம் உங்கள் சொந்த ஆக்கங்களுக்கே முக்கிய இடம் கொடுப்போம் உங்களுடன் தொடர்பு கொள்வதற்கு உங்கள் விலாசத்தையும் தெளிவாக முழுமையாக எழுதவும்.

ஆசிரியர் இறைதூதன்
மானிப்பாய் சத்யசாயி நிலையம்
ஹலக்லேன், மானிப்பாய்.

## இனிய தீபாவளியே வருக

ஆண்டவன் படைத்த இயற்கை
அழகு கோலம் போடும் காலம் மாறி
மழை பொழிந்து குளிர் வீசும்
மரங்கள் புத்துணர்வு பெற்று
மணம் பரப்பி பூத்துக் குலுங்கி
மாரியை வரவேற்று மாலை சூடும்
மாதம் ஐப்பசி தனிலே
இந்து மதத்தவர் குதூகலிக்க
இனிய திருநாளாம் தீபாவளியே......!
வருக எம் உள்ளம் களிக்க வருக......!!

அசுரனை சங்கரித்த இந்நாள் தனிலே – எம்
அசுரத் தனங்கள் ஒழித்திடுவோம்
மனதில் ஒளி பரவிடவே – கையில்
மங்கள தீபங்கள் ஏந்தி நிற்போம்.........!
புத்தாடை அணிவது போல் - வாழ்விலும்
புது மணம் பொழியச் செய்வோம்......!
சாத்வீகமாய் தீபாவளியைக் கொண்டாடி
சாந்தியை வாழ்வில் அடையவே
உறுதி பூண்டு உனை அழைக்கின்றேன்
வருகவே.... இனிய தீபாவளியே வருக......!

– தி. சத்தியசீலி –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீபாவளியை புனிதமாகக் கொண்டாடுவோம்

## - சிறுகதை -

''சாந்தி ! சாந்தி ! குரல் கேட்டு ஓடி வருகிறாள் சாந்தி ''யாரு .. லஷ்மியா ?என்ன ''ஒபிஸ்'' விட்டு வருகிறாய் போல இருக்கு ஏதாவது அவசரமோ ..? ''அவசரம் ஒன்றும் இல்லை சாந்தி .. தீபாவளி வருகிறதல்லவோ எங்கடவீட்டுக்கு பக்கத்திலே இருக்கிற அழகன் என்றவன் ஆடு அடிக்கப்போறானாம் என்னை யும் ஒரு பங்கு எடுக்கும்படி கேட்டான் ஆனால் விலைதான் ஆளையே விழுங்கிவிடும் போல இருக்கு .. அதுதான் ஒரு பங்கு இறைச்சியை எடுத்து நானும் நீருமாகப் பிரித்து எடுப்போம... என்று யோசிக்கிறேன். அதுதான்உம்மைக் கேட்க லாம் என்று வந்தேன்'' என்றாள் லஷ்மி.

''ஓ .. அப்படியே .. வேள்வி இறைச்சி கிடைத்திருக்கே... ஒரு பங்கை வேண்டிப் பிரித் தெடுத்து தீபாவளியை தடல் புடலாகக் கொண் டாடினால் போகிறது... என்று சம்மதம் கொடுத் தாள் சாந்தி.

இவர்கள் பேசிக்கொண்டு இருக்கும்போது பிள்ளைகள் சுபாவும், ரமணனும் வருகிறார்கள். '' என்ன கையில் கொப்பியும்'' பென் ''உடனும் வருகிறீர்கள்'' டியூசனோ'' ? லஷ்மி கேட்கிறாள் '' இல்லை அன்ரி ..'' ''நாங்கள பாலவிஹாஸ் வகுப்புக்குப் போட்டு வருகிறோம்'' சுபா பதில் சொன்னான்.

> **அன்னையரே...!**
>
> சிறார்களை ஒளியடைந்தவர்க ளாகவும் அருளாளர்களாகவும் உறுதியான வர்களாகவும் உரு வாக்குபவர்கள் அன்னையரே.
>
> - பாபா -

'' என்னது .. பாலவிஹாஸ் வகுப்போ . அதுவென்ன புதுவிதமான படிப்பு ..? லஷ்மி விளங்காமல் கேட்டாள். உமக்குத் தெரியாதே... இஞ்ச பக்கத்திலே இருக்கிற சத்திய சாயி சேவா நிலையத்திலே ஒவ்வொரு வெள்ளிக் கிழமைகளி லும் பாலவிஹாஸ் எனப்படும் மனிதமேம்பாட்டுக் கல்வி படிப்பிச்சுக் கொடுக்கினம். அங்கு படிப்பிக் கும் டீச்சரும் பிள்ளைகளை அனுப்புங்கோ என்று ஒரே கரச்சல் ..

குறுக்கிட்ட லஷ்மி ''கொஞ்சம் பொறுங்கோ சாயி நிலையங்களிலே பஜனை மட்டும் தானே நடைபெறுகிறது? இதுவென்ன குழந்தைகளுக்கு வகுப்புகளும் நடைபெறுகிறது என்று சொல்லுகி றீர்கள் .. அதிசயமாகக் கேட்டாள் லஷ்மி.

''நானும் முதலில் அப்படித்தான் நினைத் தேன் ஒருமுறை போய் பார்த்தேன் அங்கு நிறைய நல்ல விஷயங்கள் எல்லாம் நடக்கிறது லஷ்மி... எனக்குத்தான் போறதுக்கு நேரம் வருவதில்லை என்றாள் சாந்தி ''அங்கே அந்த வகுப்புக்கு போறதாலே பிள்ளைகளிலே மாற்றம் ஏதாவது உண்டா...? லஷ்மி சந்தேகத்துடன் கேட்டாள்...

ஓம்... ஓம்... சும்மா சொல்லப்படாது விடிய 5 மணிக்கு நான் கூட எழும்பமாட்டேன் அதுகள் படுக்கையை விட்டு எழும்பி படுக்கை யில் இருந்தபடியே என்னவோ சொல்லிக் கும்பி டுதுகள் அதேபோல படுக்கைக்கு போகும் போதும் கடவுளுக்கு முன்னாலே இருந்து என் னவோ சொலலி வணங்குதுகள் .. கேட்டால் நாங்கள் அறியாத பெரிய பெரிய விஷயங்கள் எல்லாம் சொல்லுதுகள் அப்ப வகுப்புக்கு அனுப்பிறதாலே நல்லது என்று சொல்லுங்கள் என்றாள் லஷ்மி

''அதுதானே சொல்றேன் . முன்பு நாய் கள் பூனைகளைக் கண்டால் குளறக் ... குளற அடிக்குங்கள் தாங்களும் ஒருவருக்கு ஒருவர் கோள் மூடைந்து சண்டை போடுங்கள் மற்ற வர்களைப் பற்றி வீண்கதை சொல்லுங்கள் இது வெல்லாம் பாவ காரியங்கள் என்றும் நல்ல சின் னச் சின்ன கதைகள் மூலம் சொல்லிக் கொடுக்கி றார்கள். அதனாலே எல்லா உயிர்களிடத்திலேயும் பெரியவர்களிடத்திலேயும் அன்பாகவும் பணிவாக வும் நடக்கிறார்கள் முக்கியமாக பெற்றோர்கள் தான் தெய்வம் என்று சொல்லிக் கொடுப்பதாலே என்னுடன் பணிவாக அன்பாக நடக்கிறார்கள்'' என்று புகழ்ந்தாள் சாந்தி. அப்படியே... அது பிள்ளைகளை நல் வழிப்படுத்தும் ஆன்மீகக் கல்வி வகுப் பென்று சொல்லுங்கோவன் என்றாள் லஷ்மி

''அப்படித்தான் லஷ்மி குழந்தைகள் தான் வருங்காலத்து தலைவர்கள் அவர்களை நல்வழிப் படுத்துவதன் மூலம் வீட்டிலும் நாட்டிலும் அமை தியை கொண்டுவரலாம் குழந்தைகளை அனுப் புங்கள் என்று சொல்லிக் கூட்டிக்கொண்டு போகி றார்கள்'' என்றாள் சாந்தி

''அப்படியே . ஓ .. அது நல்லது தானே... நானும் என் மகள் சோபியாவை அனுப்பினால் நல்லது பிள்ளை சுபா, ரமணன் அந்தச் ரீச்சர் மார் இண்டைக்கு என்ன சொல்லித் தந்தவை சொல்லுங்கள் பார்க்கலாம்'' லஷ்மி கேட்கிறாள்.

## ★ சிவசக்தி ★

அது தான் ''அன்ரி'' நாங்களும் சொல்வ தற்கு ஓடி வந்தோம் .. அம்மா... வருகிற வியா ழக்கிழமை ,தீபாவளி பண்டிகை அதை நாங்கள் புனிதமான முறையில் கொண்டாட வேண்டும் என்று எங்கடை ரீச்சர் சொன்னா என்றாள் சுபா

''அதென்ன புனிதமான முறையில் என்றால் என்னமாதிரி இவ்வளவு நாளும் புனிதம் கெட்ட முறையிலேயே கொண்டாடினாங்கள்...'' என்று கோபமாகக் கேட்டாள் அம்மா சாந்தி

''வேறு எப்படி அம்மா நாங்கள் கொண் டாடினோம் என்பதைக் கொஞ்சம் சிந்திச்சு பார்ப்போம் கதறக் கதற வெட்டிய ஆட்டுஇறச்சி கறியும் சோறும் .. புத்தாடை உடுத்து தீபாவளி யைக் கொண்டாடினோம் ''கள்'' குடிப்பவர் கள் இறைச்சியுடன் சேர்த்து கள்ளும் குடிப் பார்கள் பிறகென்ன நரகாசுரனின் வழித் தோன் றல்கள் போல தானே .. இவ்வளவு காலமும் நாங்கள் தீபாவளியைக் கொண்டாடினோம். என்றாள் சுபா

''ஆனால் தான் இறந்த இந்நாளை தீய குணங்களை செயல்களை அகற்றி அதற்காகத் தான் தலை முழுகும்படி சாஸ்திரங்களில் சொல் லப்பட்டிருக்கிறது புனிதமான சாத்வீக உணவு டன் புத்தாடை உடுத்து கொண்டாடுங்கள் என்று நரகாசுரன் கிருஷ்ணனை கேட்டுக் கொண் டான். தன் அசுரத்தனங்கள் இனிமேல் வேண் டாமென்று ஆனபடியால் நாங்கள் தூய்மையா கத்தான இம்முறை கொண்டாடவேண்டும். என்றான் ரமணன்.

''இப்படி கெட்ட குணங்களை விட்டு நல்ல குணங்களை கடைப்பிடித்து நல்லவர்களாக நடந் தால் தான் கடவுளின் அன்பும் ஆசியும் அருளும் எமக்குக் கிடைக்கும் அம்மா'' என்று முடித்தாள் சுபா.

''ஓ ! எனக்குப் போதிக்கிறீர்களா...! போடி பைத்தியக்காரி நாங்கள் தலைமுறை தலை முறையாக வேள்வி இறைச்சியுடன் தான் தீபா வழியைக் கொண்டாடுவோம். நீ என்ன... புதுச் சட்டம் போடுகிறாய் மாமிசம் சாப்பிடாமல் விட்டால் உடம்பே கெட்டுவிடும்'' தீயை மிதித் தவர் போல கத்தினாள் சாந்தி.

''அம்மா நல்ல நாட்களிலாவது புனிதமாக இறை வழிபாட்டில் ஈடுபடுவோம் என்றுதானே சொன்னேன்... நீங்கள் அசுரத்தனமாகக் கொண் டாடுவதாக இருந்தால் உங்களுடைய சாப்பாடு எனக்கு வேண்டாம்'' என்றாள்சுபா.

எனக்கும் வேண்டாம்... நீங்களே சமைச்சு சாப்பிடுங்கள் நாங்கள் கோகிலா அன்ரி வீட் டுக்கு போய் சாப்பிட்டு விட்டு... அப்படியே அவ வுடன் சேர்ந்து சாயிபஜனைக்கும் போய் புனித மான முறையில் கொண்டாடுவோம்... என்றான் ரமணன்.

எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டிருந்த லஷ்மிக்கு பெரிய அதிர்ச்சி . சிந்தித்தும் பார்த் தால் குழந்தைகளின் வாதத்தில் நியாயம் இருப் பதாகப் பட்டது ''ஏன் சாந்தி ... பிள்ளைகள் சொல்வது பேபல இம்முறை புனிதமான முறை யில் தீபங்கள் ஏற்றி கோவிலுக்குப் போய் 'வணங் கினால் என்ன? இந்த இறைச்சி ஒன்றும் வேண் டாம். அது பாவகாரியம்... என்றாள் லஷ்மி.

உண்மைதான் லஷ்மி......, பிள்ளைகள் நல்ல வழியில் செல்ல ஆயத்தமாகும் போது நாம் இடையில் நின்று கொண்டு தடங்கள் போடக் கூடாது .. சரி சுபா ரமணன்... உங்கள் விருப்பம் போல இம்முறை மட்டுமல்ல... இனிமேல் வரப் போகும் தீபாவளியையும் நாம் புனிதமாகவே கொண்டாடுவோம் சரிதானே...?

''சரியம்மா... இப்பதான் எங்கள் அம்மா நல்ல அம்மா'' அப்ப நானும் வரப்போறன்... இறைச்சி வேண்ட நினைத்த காசுக்கு நல்ல மரக் கறிகளாக வேண்டிச் சமைக்கப் போகிறேன். என் றாள் லஷ்மி எல்லோரும் சேர்ந்து சிரிக்கிறார்கள்.

( யாவும் கற்பனை )

★ ★ ★

குழந்தைகளின் எதிர்காலம் அன்னையரால் உருவாக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வறுமை சிறுமை போக்கி சீரான வாழ்வினைத் தரும் கந்தசஷ்டி

முருகக் கடவுளுக்குரிய விரதங்களில் ''கந்த சஷ்டி'' மிகச்சிறப்புடையதாகும். ஐப்பசி மாதத்தின் வளர்பிறையின் பிரதமை முதல் சஷ்டி ஈறாகவுள்ள ஆறு நாட்களும் கந்தசஷ்டி விரத நாட்களாகும்.

இவ்விரதத்தை அனுஷ்டிப்பவர்களுக்கு வறுமையும் சிறுமையும் போக்கி சீரான செம்மையான வாழ்வினையும் சகல செல்வங்களையும் தரவல்லதாகும். அத்துடன் பக்தர்களின் ஆணவ மலத்தை ஒடுக்கி முக்தியும் அருளும்.

முருக பக்தர்கள் ஒரு கடுந்தவமாகவே இவ்விரதத்தைக் கருதி ஆறுநாட்களும் முழுப்பட்டினியாக உபவாசம் இருப்பார்கள் முதல் நாள் அமாவாசையன்றே ஒருநேர உணவுண்டு விரதமாக இருந்து மறுநாள் உபவாசத்திற்கு தயாராவார்கள்.

**26 - 10 - 98**

பிரதமை அன்று அதிகாலை நீராடித் தூய ஆடையணிந்து நித்திய கர்மானுஷ்டானம் முடித்து முருகன் ஆலயம் சென்று வணங்குவர். இது போன்று ஆறு நாட்களும் அன்ன ஆகாரம் எதுவும் இன்றி இறை வழிபாட்டில் கழிப்பார்கள்.

இந்நாட்களில் முருகநாம பஜனை, நாம ஜபம். கந்த புராணப் படனம் கேட்டல் கந்த சஷ்டி கவசம், திருப்புகழ், கந்தரனுபூதி, கந்தரலங்காரம், சண்முக கவசம், படிக்கும் இத்தகைய புண்ணிய புனித காரியங்களுடன் பக்தியுடன் ஈடுபடுவது நன்மைபயக்கும்

ஆலயங்களில் ஆரம்ப தினத்திலேயே தர்ப்பை அணிந்து காப்புக்கட்டி சங்கல்பித்து ஆறு நாளும் நோன்பிருத்தல் முறை. இறுதி நாளில் காப்பை அவிழ்த்து தர்ப்பையுடன் சேர்த்து தாம்பூல தஷிணையுடன் அர்ச்சகரிடம் சமர்ப்பிப்பதே வழக்கம்.

ஏழாம் நாள் காலையில் நீராடி நித்திய கர்மனுஷ்டானங்களை நிறைவேற்றி பாராயணைப்பூசையும் கண்டு வழிபட்ட பின் அடியார்களுக்கு அன்னதானம் செய்து பாரணை செய்ய வேண்டும்.

இப்படியாக கடும் விரதம் அனுஷ்டிக்க முடியாதவர்கள் முதல் ஐந்து நாட்களும் இரவு ஒருநேரம் பால் பழம் அல்லது பலகாரம் உண்டு கடைசி நாள் உபவாசம் இருக்கலாம்.

அதுவும் செய்ய முடியாதவர்கள் முதல் ஐந்து நாட்களும் பகல் ஒரு பொழுது அன்னமும் ஆறாம் நாள் இரவு பால் பழமும் அல்லது பலகாரமும் சாப்பிட்டு விரதமிருக்கலாம்.

இவ்விரதம் ஆறு வருடங்கள் அல்லது பன்னிரண்டு வருடங்கள் தொடர்ந்து கைக்கொள்ளப்பட வேண்டும். உபவாசம் அல்லது ஒருநேர உணவு என்பது போன்ற உணவு முறைகளும் ஆறு வருடமும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும் ஆறாவது வருடம் விரத முடிவில் விரதோத்யாபனம் செய்து விரதத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

இவ்விரதம் தொடர்பான புராணக்கதையையும் இவ்வேளையில் சிந்தித்துப் பார்த்தல் வேண்டும்.

காசியப்பனுக்கும் மாயைக்கும் பிறந்த பிள்ளைகளே சூரன், சிங்கன், தாரகன் இவர்கள் நெடுங்காலமாக தேவர்களுக்கும் மனிதர்களுக்கும் துன்பம் கொடுத்து அழிவு செய்து வந்தனர்.

தேவர்கள் சிவபெருமானிடம் சென்று முறையிட அவர் தனது சக்தியையே முருகப்பெருமானாகப் பிறப்பித்தார். முருகப்பெருமான் சூரபதுமாதி அசுரர்களுடன் ஆறு நாட்கள் போரிட்டு வென்றார்.

சூரனையும் அவன் கூட்டத்தினரையும் அழித்து தேவர்கள் முனிவர்கள் மனிதர்கள் மற்றோரையும் காப்பாற்றிய அருட்பெருங்கருணைச் செயலை வியந்து இப்போர் நிகழ்ந்த காலமாகிய ஐப்பசி மாத வளர்பிறை முதலாறு நாட்களையும் விரத நாட்களாகக் கொண்டு அனுஷ்டித்து வந்தனர்.

இ. குணசீலி

# பழக்க வாசனையின் பரமசக்தி

**- பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணர் -**

உலக ஆசாபாச எண்ணத்தோடும் வாழ்வோடும் கூடியவர்கள் பரிசுத்த, பற்றற்ற தன்மைகளையோ தலங்களையோ நாடினால் அமைதிக் குறைவு, சுகக்குறைவு முதலியவற்றோடு கூடியவர்களாய்த்தான் இருப்பார்கள்.

ஒருநாள் மாலைநேரம் சந்தை ஒன்று கூடியது சில மீன் விற்கும் பெண்கள் தாம் கொண்டு வந்த மீனை விற்றுவிட்டு வீடு திரும்பிக்கொண்டு இருந்தனர். மழை கொட்டியபடி இருந்தது இருளும் சூழ்ந்து கொண்டது பாவம் அவர்கள் என்ன செய்யமுடியும்...?

வழியில் ஒரு குடிசையைக் கண்டு அங்கே சென்றனர் அக்குடிசை ஒரு பூக்கடைக்காரனுடையது அவன் மிகவும் நல்லவன். அப்பெண்களின் நிலையைக் கண்டு தங்கிச் செலல இடம் கொடுத்தான். அவர்கள் மிகவும் மகிழ்வுடன் உள்ளே சென்றனர். அந்த இடம் ''கமகம'' என நறுமணம் வீசியதைக் கண்டு நான்கு பக்கமும் பார்த்தனர்.

ஒரு மூலையில் சில பூக்கூடைகள் இருந்தன, அவை வாடிக்கையாளருக்கு மறுநாள் கொடுப்பதற்காக வைக்கப்பட்டவை. ஆனால் மீன் வாசனையோடு பழகியவர்களுக்கு நறுமணம் வீசும் வாசனை எப்படிப்பிடிக்கும்.? நித்திரை கொள்ள முடியாமல் கஷ்டப்பட்டனர்.

அப்போது ஒரு பெண் மற்றவர்களைப் பார்த்துச் சொன்னாள், நமக்கு தூக்கமே வருவதாக இல்லை இந்தப் பூக்கூடைகளை வேறிடத்தில் வைக்கவும் முடியாது எம்மிடமுள்ள கூடைகளை நனைத்து பக்கத்தில் வைத்தால் பூக்கூடைகளால் உண்டாகும் கஷ்டம் நீங்கும்'' என்றாள்.

எல்லோரும் அப்படியே அந்த யோசனையை ஏற்றுக்கொண்டனர். பின் எல்லாம் பெண்களும் குறட்டைவிட்டு தூங்கிவிட்டனர்.

பழக்கவாசனையின் சக்தி இப்படிப்பட்டது தான். பூவின் வாசனை எவ்வளவு விரும்பக் கூடிய மணம்! இதை நல்லதென்று மீன்வாசனையில் பழக்கப்பட்ட பெண்கள் விரும்பவில்லை.

இன்று மக்கள் இப்படித்தான் நல்லவற்றைத் தேடி அதன் வாசனையை அனுபவிக்க முடியாமல் இன்று பழக்கங்களுக்கு ஆளாகி அதுவே மிகவும் நல்லது எனவிரும்பி அந்த வாசனையை மணந்து மகிழ்கிறார்கள்.

இந்த உலக வாசனைகள் தான் உண்மையான பயபக்தி தூய்மைகளை மறைக்கின்றன எது நல்லது... எது தீயது என தெரிந்து கொள்வது மிகவும் முக்கிய குறிக்கோளாக மனிதன் கொண்டு வாழவேண்டும்.

– சி. சிவா –

## ஹரி நாம மகிமை

பகவத்நாமம் சகல சக்தி வாய்ந்தது அதனை உச்சரிப்பதில் உடன் பதில் ஏற்படாது போகலாம். ஆனால் வீட்டின் முகப்பில் சிதறி வீழ்ந்த விதை பல நாட்களுக்குப் பிறகு தரையில் முளைப்பது போல பகவத்நாம உபாசனையால் ஏற்படும் பலன் என்றாவது ஒருநாள் வந்தே தீரும். என்று ஸ்ரீ சைதன்னியர் கூறியிருக்கின்றார்.

ஸ்ரீ இராமகிருஸ்ண பரமஹம்சர்
தொகுப்பு: திருமதி யோ. பொன்னுராசா
வட்டுக்கோட்டை.

நாமம் மலை போல் பாவத்தையும் இடிபோல துகளாக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




### அத்தியாயம் - 7

*சென்ற இதழ் தொடர்ச்சி*

தவறான வழியில் செல்ல வாய்ப்பில்லாது. தரும நெறியின் இல்லறம் நடத்த சிறு வயதிலேயே கற்றுத்தேற வேண்டும். என்பதற்காக பால்ய விவாகம் விதிக்கப் பட்டது. அரசன்,, வசிஷ்டர் போன்ற சான்றோரை கலந்து ஆலோசித்தான்.

#### விஸ்வாமித்திரர்

இவ்வாறு இருக்கையில் விவாமித்திர முனிவர் அங்குவந்தார் தசரதன் அவர் வருகைக்கு மிகவும் மகிழ்ச்சியுற்றான். விஸ்வாமித்திரரும் அவனுக்கு நல்லாசி வழங்கினார். தான் அங்கு வந்த காரணத்தைக் கூறினார். ,நான் யாகம் நடத்த நிச்சயித்திருக்கிறேன். அதற்குப் பாதுகாவலாக இராமனை அனுப்பக் கோருகிறேன். என்றார்

தசரதன் அதற்கு, 'ஸ்வாமி இவர்கள் பதினான்கு வயது பாலகர்கள். எந்த சங்கடத்தையும் எதிர் கொண்டு அறியாதவர்கள். அவர்கள் எதிர்க்க வேண்டியவர்கள் கொடிய அரக்கர்கள். ஆகவே இந்த பாலகர்களை அனுப்புவது இயலாத காரியம்'' என்று கூறினான் முதலில் முனிவர் வேண்டியதைக் கொடுப்பதாக அவர் உறுதிமொழி கூறினார்

#### இஷ்வாகு குலம்

விசுவாமித்திரருக்கு சினம் மிகுந்தது. 'தசரதா! இஷ்வாகு குலத்தில் யாரும் தாம் சொன்ன சொல்லை மீறியதில்லை. உமது குலத்தில் யாரும் பொய் கூறியதில்லை நீர் சத்தியவான். நீர் தர்மவான், பவித்திரமான இதயம் கொண்டவர். நீர் இப்போது பொய் கூறினால், உமது குலத்துக்கே அது இழுக்கு''

தசரதனை பயம் சூழ்ந்தது ''சொன்ன சொல்லை மீறுபவர்கள் பெரும்பாவிகள். எத்தனை சடங்குகள் புரிந்தாலும், வாக்குறுதியை நிறைவேற்றாவிடில், அனைத்தும் வீணாகிவிடும். நீ அசுவமேத யாகம் செய்தாய். உனது புத்திரகாமேஷ்டி யாகத்தின் பயனாக நன்மக்களைப் பெற்றாய். நீ கூறும் பொய்யால், நீ சொன்ன சொல்லைக் காப்பாற்றாததால் நீ செய்த அனைத்தும் வீணாகிவிடும்.

வாக்குறுதியை நிறைவேற்றாமல் இருப்பதைவிட சாவு மேலானது. வாக்கை அளித்து பின் அதை மறுப்பது, சாவுக்குச் சமானம். வாக்கை அளித்துவிட்டுப் பின் அதை திரும்பப் பெறலாகாது. இது ஒவ்வொரு மனிதனும் கடைப்பிடிக்க வேண்டிய உறுதியான கோட்பாடு. இது ஒவ்வொரு மனிதனின் இலட்சியமாக இருக்கவேண்டும். இதுவே மனுச்சக்கரவத்தி விதித்துள்ள நெறி நாம் மனுவிடமிருந்து பிறந்தவர்கள். நாம் சத்தியத்திலிருந்து விலகினால் நாம் மனிதர்களே அல்ல. விஸ்வாமித்திரர் இவ்வாறு தசரதனிடம் ஒரு உபதேசமே நிகழ்த்திவிட்டார்.

#### ஸ்ரீராமச்சந்திரன்

தசரதன் இவற்றையெல்லாம் காதில் வாங்கிக்கொள்ளவே இல்லை. அப்போது வசிஷ்டர் அரசவைக்குள் பிரவேசித்தார், இருவருக்கும் நடந்த உரையாடலை கேட்டார். அவர் தசரதரிடம் கூறினார்.

''தசரதா! சொன்ன சொல்லை மீறலாகாது உன் மக்கள் சாதாரணமானவர்கள் அல்ல, அவர்கள் தெய்வத் தன்மை வாய்ந்தவர்கள் நீ ஏன் பிரமையால் தத்தளிக்கிறாய் என்ன நடக்குமோ என்று நீ நடுங்க வேண்டாம் உலகனைத்தையும் காத்துரட்சிக்கும் ஸ்ரீ இராமச்சந்திரன் உன்னுடைய மகன். அவனுக்கு எத்தவிதமான துன்பமும் நிகழாது அவன் அனைத்து மங்கலங்களும் நிறைந்த மங்காவடிவம் அத்தகைய மங்கல வடிவினைச் சந்தேகித்தல் தவறு விசுவாமித்திரருடன் அவனை அனுப்பு'' என்றான்.

#### பிரதி பிம்பம்

இராமனை, இலட்சுமணன் எப்போதும் பின் தொடர்வான். இராமனின் பிரதிபிம்பமே இலட்சுமணன். பரதனின் பிரதிபிம்பமே சத்ருக்னன். குழந்தைகள் பிறந்ததும் தொட்டிலில் இடப்பட்டார்கள் இராமன், தொட்டிலில் கை கால்களை ஆட்டிச்சிரித்தான். அது போல கைகேயி பரதனைத் தொட்டிலில் இட்ட போது அவனும் சிரித்து விளையாடினான்.

ஆனால் இலட்சுமணனும், சத்துருக்னனும் பிறந்த பொழுதிலிருந்தே அழத்தொடங்கினார். என்ன சங்கடம் என்று புரியாது அவர்கள் தசரதனிடம் நேரே சென்று கூறினர். தசரதனும் மருந்தும் செய்ய ஏற்பாடு செய்தான். அதனால் ஒரு பயனும் ஏற்படவில்லை.

மந்திரம், தந்திரம், யந்திரம், அனைத்தையும் பயன்படுத்தினார். அழுகை அதிகமானதே தவிர குறையவில்லை வேறு வழியில்லாமல் வசிஷ்டரிடம் சென்று அவர் உதவியை நாடினார். வசிஷ்டர் சிறிது நேரம் தியானம் செய்து பிறகு சுமித்திரையிடம்

''அம்மா சுமித்திரா, மருந்துகளால் ஒரு பலனும் இல்லை. இலட்சுமணனை இராமனருகில் படுக்க வை சத்ருக்னனை, பரதன் அருகில் படுக்க வை. இவர்கள் இருவரும் தனி தொட்டிலில் இருக்கும்படி ஏற்பாடு செய் இனி அவர்கள் அழ மாட்டார்கள.

#### சுமித்ரை

சுமித்ரை கோசலையின், கைகேயியின் அனுமதி பெற்று வசிஷ்டரின் ஆணைப்படி குழந்தைகளை படுக்கவைத்தாள் இராமனின் அருகில் இலட்சுமணனைக் கிடத்தியதுமே இலட்சுமணன் நன்கு உறங்கத் தொடங்கினான். இதைக் கண்டு சுமித்ரை மிகவும் அதிசயமுற்றாள். வசிஷ்டரிடம், 'முன்பு ஏன் குழந்தை அழுதான்? இப்போது ஏன் மகிழ்ச்சியுடன் இருக்கிறான்? என்று கூறும்படி வேண்டினாள் வசிஷ்டர்.

''அம்மா கிளை மரத்தின் ஒரு பகுதி. மனிதத்தன்மை தெய்வத்துவத்தின் ஒரு அம்சம். கிளை மரமில்லாவிடில் தனித்து வாழ இயலாது. தாயில்லாவிடில் குழந்தை வாழ இயலாது, பரமாத்மா இல்லாவிடில் ஜீவன் வாழ இயலாது ஆகவே இறைவன் இராமன் அருகில் இருப்பதால் இலட்மணன் மகிழ்ச்சியுடன் இருக்கிறான் அவனுக்கு அது தான் உண்மையான இயல்பான இடம்.

#### ஆனந்தம்.

அதுவே என்றும் அழியாத ஞானத்தின் ஒப்பற்ற ஆனந்தம். பாயாஸத்தின் மூலமாக இராமனிடமிருந்து முன்பு பிரிவுபட்ட அவன் இப்போது இராமனுடன் இணைந்திருக்க விரும்புகிறான். பாயாஸத்தின் மூலமாக சத்துருக்னன் பரதனிடமிருந்து பிரிக்கப்பட்டான்.

ஆகவே அவனது இயல்பான இடத்துக்கு பரதன் இருக்கும் இடத்துக்கு வந்து சேர்ந்து மகிழ்ச்சி அடைகிறான், ஆகவே சீவன் தனது மூலவிடத்தை அடையும் வரையில் துன்பமடைகின்றது தனது மூலமுதல் இடத்தைத் தவிர எங்கு சென்றாலும் சரி மனிதன் துன்பமுறுவது உறுதி

தொடரும்

ஆசை நல்ல காரியங்களைச் செய்ய விடாமல் தடுக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ✠ பாவியான பெண்ணுக்கு மன்னிப்பு அளித்த இயேசுநாதர்

பரிசேயருள் ஒருவன் யேசுநாதரை தன்னோடு விருந்துண்ண வேண்டுமென்று அவரைக் கேட்டுக் கொண்டான். அவர் அந்தப் பரிசேயனுடைய வீட்டுக்குச் சென்று சாப்பிட உட்கார்ந்தார்,

அந்த ஊரில் பாவியான பெண் ஒருத்தி இருந்தாள். அவர் பரிசேயனுடைய வீட்டில் சாப்பிடுகிறார் என்பதை, ஒரு வெள்ளைக் கல் பரணியில் பரிமளத் தைலம் கொண்டு வந்து, யேசுநாதருக்கு பின்னால் பாதத்தருகில் அழுது கொண்டு நின்று அவருடைய பாதங்களைத் தன் கண்ணீரால் நனைத்து, தன் கூந்தலினால் துடைத்தாள். அவர் பாதங்களை முத்தமிட்டு, பரிமளத் தைலத்தைப் பூசினாள். யேசுநாதரை அழைத்த பரிசேயன் அதைப் பார்த்து விட்டான்.

''இந்த ஆள் தீர்க்கதரிசி என்றால் தம்மைத் தொடுகிற பெண் யார் என்றும், எப்படிப்பட்டவள் என்றும் அறிந்திருப்பார். இவள் பாவியாயிற்றே'' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். யேசு அவனிடம்,

''சீமோனே! உனக்கு நான் ஒன்று சொல்ல வேண்டும்'' என்றார். அதற்கு அவன், சொல்லும் போதகரே'' என்றான் அப்போது யேசு,

''ஒருவனிடம் இரண்டு பேர் கடன்பட்டிருந்தனர். ஒருவன் ஐந்நூறு திநாரியப் பணமும், மற்றவன் ஐம்பது திநாரியப் பணமும் கொடுக்க வேண்டியதாயிருந்தது கடனைத் தீர்க்க அவர்களால் முடியாதிருந்த போது, அவன் இருவரையும் மன்னித்து விட்டான். அவர்களுள் எவன் அவனிடம் மிகுந்த அன்புடையவனாய் இருப்பான்? அதைச் சொல்'' என்றார்

அதற்கு சீமோன், ''எவனுக்கு மிகுதிப் பணத்திற்காக மன்னித்து விட்டானோ அவனே என்று நினைக்கின்றேன.'' என்றான. அதற்கு யேசு நாதர். ''சரியாகத் தீர்மானித்தாய்'' என்று கூறி அந்தப் பெண்ணின் பக்கமாகத் திரும்பி, சீமோனிடம்,

''இந்தப் பெண்ணைப் பார்த்தாயா ? உன் வீட்டுக்குள் வந்தேன், நீ என் கால்களுக்கு தண்ணீர் தரவில்லை இவளோ தன் கண்ணீரால் என் பாதங்களை நனைத்துக் கூந்தலினால் அவற்றைத் துடைத்தாள் நீ! எனக்கு முத்தம் கொடுக்கவில்லை, இவளோ நான் உள்ளே வந்ததில் இருந்து என் பாதங்களை ஓயாமல் முத்தமிட்டுக் கொண்டு இருக்கிறாள். நீ என் தலைக்கு எண்ணெய் பூசவில்லை, இவளோ என் பாதங்களில் பரிமளத் தைலம் பூசினாள ஆகையால் உனக்குச் சொல்கிறேன், இவள் செய்த பல பாவங்கள் இவளுக்கு மன்னிக்கப்பட்டுள்ளன, இவள் காட்டிய மிகுந்த அன்பில் இருந்து இது தெரிகிறது எவனுக்கு சிறிதளவு மன்னிக்கப்படுகிறதோ அவன் சிறிதளவே அன்பு காட்டுவான்.

இப்படிக் கூறிய யேசு நாதர். பாவியான அந்தப் பெண்ணைப் பாரத்து ''உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டன,'' என்றார். அப்போது அவரோடு கூட இருந்து சாப்பிட்டவர்கள்,

''இவர் யார் ? பாவங்களையும் மன்னிக்கிறாரே !'' என்று தங்களுக்குள் பேசிக் கொண்டனர். யேசுநாதரோ அப் பெண்ணிடம், உன் விசுவாசம் நீ மீட்படையும்படி செய்திருக்கிறது நீ சமாதானத்துடன் செல். என்று சொன்னார்.

# கட்டளைக்குக் கீழ்ப்படி

## - குட்டிக்கதை -

பசிய மரங்கள் அடர்ந்து காட்சியளிக்கும் அழகிய சிறு கிராமம் ஒன்றிலே' நகரத்தில் கல்வி கற்று விட்டு வந்த ஆசிரியர் ஒருவர் இருந்தார். அவர் அக்கிராமத்துச் சிறுவர்களுக்கு கல்வியைப் புகட்ட ஆவலாய் இருந்தார்.

இதனை அறிந்த கிராமத்துப் பெற்றோர் தம் பிள்ளைகள் படிக்க வேண்டும் 'என்று ஆசை கொண்டு அந்த ஆசிரியரிடம் பிள்ளைகளைச் சேர்த்தார்கள்.

கிராமத்துச் சிறுவர்கள் மிகவும் 'துடுக்குத் தனம் உடையவர்கள் அவர்களுக்கு கணக்கு படிப்பிப்பது என்றாலோ வெகு சிரமம் இருந்தும் ஆசிரியர் மிகவும் கருணையுடனும் கண்டிப்புடனும் பாடங்களைப் படிப்பித்தார்.

தான் கொடுத்த பாடங்களைச் சரிவரச் செய்யாத சிறுவர்களைத் தண்டித்தார். இதனைச் சிறுவர்களால் ஏற்க முடியவில்லை. இதனால் ஒவ்வொருவராக வகுப்புக்கு வராது நின்று விட்டார்கள்,

### ★ ஷாமிலா ★

குமார் மாத்திரம் மீதியாக இருந்தான் அவனுக்கு ஆசிரியர் நல்லவராகவே இருந்தார். காலம் சென்றது. அக்கிராமத்திற்கே பெருமை சேர்க்கும்படியாக குமார் பல்கலைக்கழகம் சென்றான் பெற்றோர் பெருமகிழ்ச்சி அடைந்தனர்.

குமார் பல்கலைக்கழகத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டதை கேள்வியுற்ற பாதியில் படிப்பை நிறுத்திக் கொண்ட மற்றச் சிறுவர்கள் குமாரிடம் வந்து.

"குமார் நீ எப்படி அந்த ஆசிரியரிடம் கல்வி கற்று முன்னேறினாய்''.. என வினாவினார்கள் அதற்கு குமார் கொடுத்த பதில் எல்லோரையும் திசை திருப்பியது

நான் ஒருநாள் ஆசிரியர் தந்த பாடத்தைச் செய்யாமல் வகுப்புக்குப் போனேன். பாடங்கள் செய்யப்படவில்லை என்பதைக் கண்ட ஆசிரியர் எனது காதில் முறுக்கித் தண்டித்தார் அந்த நோவால் வேதனைப்பட்ட நான் அன்றிலிருந்து ஆசிரியர் இடும் கட்டளைகளை பல்கலைக்கழகம் செல்லும் வரை மீறவேயில்லை. அதனால் அவருக்கும் என் மீது அன்பு எனக்கும் அவர்மீது அன்பு இதுதான் என் உயர்வுக்குக் காரணம் அவர் இடும் கட்டளைக்கு கீழ்ப்படிந்ததேயாகும்.

ஆம் தேவ பிள்ளையே நமது ஆண்டவர் எம்மை உயர்வடையச் செய்ய ஆயத்தமாக இருக்கிறார் நாம் அவருடைய கட்டளைக்குக் கீழ்படிந்து நடந்தால் அவர் தமது பிள்ளைகளுக்கு உயர்ந்த வாழ்வை அளிப்பார்.

என் வார்த்தைகளைக் கேட்டு என்னை அனுப்பினவரை நம்புகிறவன் இப்போதே என்றுமுள்ள மெய் வாழ்வு உடையவனாயிருக்கிறான். அவன் குற்றத் தீர்ப்புக்குள்ளாகாமல் மரணத்தில் இருந்து மெய் வாழ்வுக்குள் வந்து விடுகிறான்.

– யேசு நாதர் –

அழுத்தும் சுமை சுமந்து சோர்வுற்று இருப்பவர்களே நீங்கள் என்னிடம் வாருங்கள் - யேசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 45 நாள் ஆத்மீக சாதனை

## அக்டோபர் 9ந் திகதி முதல்
## நவம்பர் 22ந் திகதி வரை

தினசரி மாலை 7-30 மணி தொடக்கம் 8 மணிவரை (புதிய நேரம்)
(நேரமாற்றத்தைக் கவனிக்கவும்)

இவ்வருட சாதனை, மத்திய இணைப்பாளரின் பணிப்பின் பேரில் இலங்கையிலுள்ள எல்லாப் பகுதி மக்களுடனும் இணைந்து செய்யவுள்ளோம்

### செய்யும் முறை

1. குடும்ப அங்கத்தவர்கள் அனைவரும் தங்கள் வீட்டிலுள்ள பிரார்த்தனை அறையில் மாலை 7-25க்கு கூடுதல், வேண்டிய ஆயத்தங்களைச் செய்தல்.
2. சரியாக 7-30 மணிக்கு 3 தடவை ஓம்காரம் தொடர்ந்து 20 நிமிடங்களுக்கு (7-50 வரை) பிரார்த்தனை. காயத்திரி மந்திரம் சிபார்சு செய்யபபடுகிறது. அல்லது தேவாரம், பஜனை, நாமஜெபம், புனித நூல்களை வாசித்தல் போன்ற, தங்களுக்கு விருப்பமான முறையில் பிரார்த்தனை செய்யலாம்.
3. 7-50 தொடக்கம் 8 மணிவரை 10 நிமிடங்களுக்கு 'ஜோதி தியானம்'
4. 8 மணிக்கு 'ஓம் சாந்தி' மூன்று தடவை கூறி சாதனையை' நிறைவு செய்தல்.
5. கூடுதலான நேரம் பிரார்த்தனை செய்ய விரும்புவோர் இந்த நேரத்திற்கு முன்பாகவோ அல்லது பின்பாகவோ பிரார்த்தனை செய்யலாம் இந்த பிரார்த்தனை ஒழுங்கையும், நேரத்தையும் மாறாமல் இருப்பது நல்லது.

இச்சாதனை மூலம் இலங்கையில் சாந்தி நிலவவேண்டுமென்ற எண்ணங்கொண்ட அனைவரையும் ஒன்றிணைத்து ஒரே நேரத்தில் பிரார்த்தித்து நல்ல அதிர்வுகளை இந்நாட்டில் ஏற்படுத்த முயற்சிப்போம்,

குடும்பத்தில் அனைவரும் இணைந்து பிரார்த்தனை செய்வதன் மூலம் குடும்பங்களில் சாந்தியை ஏற்படுத்த முயல்வோம் ; அத்துடன் சுய கட்டுப்பாட்டையும் வைராக்கியத்தையும் வளர்க்க உதவியாக இருக்கும்.

பாடசாலைப் பிள்ளைகள் அனைவரும், குறிப்பாக காயத்திரி மந்திரம் உச்சாடனம் செய்யும் பிள்ளைகள் அனைவரும் இச்சாதனையில் ஈடுபடுவது வரவேற்கத்தக்கது.

இச்சாதனையில் ஈடுபட்டோர் விபாத்தை சாதனை முடிவில் எமக்கு அறிவித்தால் எமது கணிப்பீடுகளுக்கு உதவியாக இருக்கும்.

---

4ம் பக்கத் தொடர்ச்சி

### சத்யபாமா ..........

''பாமா என்ன காரியம் செய்தாய் ? அவர் நமக்கு மட்டும் பதியல்ல .. அவர் ஜகத்பதி லோகபதி விஸ்வபதி பிராணபதி .. தேகபதி அப்படிப்பட்டவரை தனக்கு மட்டும் உரியவராக ஆக்க வேண்டும் என்று நினைப்பது சரியல்ல.'' என்று கூறினாள் ருக்மிணி.

ஆயினும் இந்த இக்கட்டான நிலைக்கு வந்த பின் தான் இதில் தலையிட்டே தீர வேண்டும் என்று முடிவ எடுத்தாள் ருக்மிணி தான் பூஜை செய்து கொண்டு இருந்த துளசியை எடுத்துக் கொண்டு பக்தியுடன் கிருஷ்ணர் இருந்த இடத்திற்குச் சென்றாள்,

அங்கே கிருஷ்ணர் நாரதருடன் கூட கடைத்தெருவுக்குக் கிளம்பிச் செல்ல தயாராகக் காணப்பட்டார். ருக்குமிணியைப் பார்த்ததும்

ருக்மிணி நம்மிருவருக்கும் இன்றுடன் தொடர்பு நீங்கி விட்டது. என்ன செய்வது ? என்றார். இதைக் கேட்டதும் சத்யபாமா மேலும் கலக்கம் அடைந்தாள். அதற்கு ருக்மிணி நாரதரை நோக்கி,

கிருஷ்ணனுக்கு சமமான எடை உள்ளது அவரது நாமமே அன்றி வேறு எதுவும் அவருக்கு ஈடாகாது ஆகவே கிருஷ்ணனின் நாமத்தை அவரது எடைக்கு சரி செய்கிறேன்'' என்றாள் ஆனால் நாரதரோ அதற்குச் சம்மதிக்கவில்லை,

இதனால் எனக்கு என்ன லாபம் ? எனக்கு லாபம் ஏதும் இல்லாமல் எப்படிக் கிருஷ்ணனை திருப்தி அளிக்க முடியும்''...? நாமமே இல்லாதவருக்கு நாமம் கூறி சரி செய்ய முடியுமா ? என்று ருக்மிணியிடம் கேட்டார்.

உடனே ருக்மிணி ஒரு துளசி இலையை எடுத்து 'கிருஷ்ணா! இலை, மலர், பழம் நீர் இவற்றில் எதையாவது உண்மையான பக்தியுடன் அளித்தால் நான் திருப்தி அடைந்து விடுவேன். என்று உறுதி அளித்துள்ளாயே அது பொய்யாகலாமா...? இதோ இந்த துளசி இலையை தூய்மையான உள்ளத்துடன் அர்ப்பணிக்கிறேன் ஏற்றுக் கொண்டு உனது வாக்கை மெய்யாக்க வேண்டும்'' என்று துளசியைத் தட்டில் வைத்தாள்.

கிருஷ்ணனை எடைபோட அவரையே பிரார்த்தித்தாள். வேறு எந்த தெய்வத்தையும் பிரார்த்திக்கவில்லை கிருஷ்ண நாமம் கூறியதும் துளசி இலை கிருஷ்ணனை விட எடை அதிகமாயிற்று தட்டுத் தாழ்ந்தது கிருஷ்ணன் அப்போது,

'ருக்மிணியின் சிறந்த பக்தி சிரத்தையே பந்தத்தில் இருந்து விடுபட மூலகாரணமாகும். அகங்காரமும் அசூயையும் ஒருவரது அழிவுக்கு காரணமாகும்.'' என்றார்.

உடனே சத்யபாமா ருக்மிணியின் காலில் விழுந்து வணங்கி, எனக்கு உன்னைப்போல பக்தி வளர அருள்புரிவாய்'' என்று வேண்டினாள்.

---

3ம் பக்கத் தொடர்ச்சி

### தீய குணங்களை ..............

அவனது முக்கிய தீயகுணம் கோபமே. அவன் தனது கோபத்தை பல வழிகளில் வெளியிட்டு வந்தான். இந்தக் கோபத்தை அழிக்க கிருஷ்ணர் ஒரு எளிய திட்டத்தை தீட்டினார். கோபம் அதிகமாக மனிதனின் பலம் குன்றி விடும். நரம்புகளும் தளர்ச்சி அடைந்து விடுகிறது;

இப்படியாக பல முறை நரகாசுரன் படையெடுத்துத்தாக்க வரும்போதெல்லாம் கிருஷ்ணர் அவனுடன் போராடமல் ஓடி அவனது சக்தியைச் சிறிது சிறிதாகக் குன்றிவிடச் செய்தார்.

இதைக் கண்ட மக்கள் கிருஷ்ணன் நரகாசுரனைக் கண்டு பயந்து ஓடிவிட்டதாகவே எண்ணலாயினர்- இம்மாதிரி உபாயத்தினால் நரகாசுரன் சக்தி மிகவும் குறைந்து அவன் பலஹீனமாகி விடும் நிலை வந்து விட்டது.

பெண்ணினத்தினரை அதிகமாக துன்பத்துக்குள்ளாக்கிய இந்த அசுரனை பெண்ணைக் கொண்டே வதம் செய்தார். சத்ய பாமாவின் கரங்களினாலே நரகாசுரன் அழிந்தான்

### நரகாசுரன் என்னும் கிரகம்

விஞ்ஞான முறையில் ஒருவரலாறும் உள்ளது. வானத்தில் எண்ணற்ற கிரகங்கள் சூரிய மண்டலத்தைச் சுற்றி வருகின்றன. துவாபர யுகத்தில ''நரக'' என்ற கிரகம் சந்திரனுடன் இணைந்து சுற்றி வந்தது. சந்திரன் அதிக குளிர்ச்சியுடன் கூடியதால் பாதிக்கப் படவில்லை. பின் இக் கிரகம் பூமியை நோக்கி விரைந்து வந்தது

இது பூமியைத் தாக்கினால் பூமி தீயினால் பொசுங்கி அழிந்து விடும். அபாயம் இருந்தது உதாரணமாக சில ஆண்டுகளுக்கு முன் எட்டுக் கோள்கள் ஒன்றாகக் கூடி ஒரே ராசியில் நிலவும் நிலை வந்தபோது இதனால் உலகிற்கு அபாயம் பெருமளவில் விளையும் என்று மக்கள் பயந்தனர்.

இதைப் போலவே 5000 ஆண்டுகளுக்கு முன் நரக என்னும் கிரகம் பூமியை நோக்கி விரைந்து வந்தது. உலக மக்கள் யாவரும் கிருஷ்ணா. கிருஷ்ணா...! எங்களை இந்தக் கிரகத்தின் தாக்குதலில் இருந்து காப்பாற்று— என்று ஓலமிட்டு வேண்டினர்.

இந்த வேண்டுகோளுக்கு இணங்கி அப்போது கிருஷ்ணன் இந்தக் கிரகத்தை அழித்தே நரகாசுர வதம் என்று கொண்டாடப்படுகிறது. இவர்கள் நரக மெனும் கிரகத்தை ஒரு ராட்சசனாக அசுரனாக கருதினர்.

உலக சார்புள்ள வரலாற்றின் படி நரகாசுரவதம் முடிந்ததும் அவனால் சிறையில் அடைத்து வைக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான மக்களை கிருஷ்ணன் விடுவித்தார்.

அதே போல ''நரக'' என்னும் கிரகத்தை அழித்து அதனால் அழிந்துபோக இருந்த உலக மக்கள் அனைவரையும் காத்தருளினார். கண்ணன்.

வெளிப்படையாக நடைபெற்ற நரகாசுர வதம். உட்புறமாக நடைபெற்றது உள்ளே உள்ள தீய குணங்களை அழித்தலே, ஒவ்வொரு மனிதரும் தனக்குள்ளே இருக்கும் தீய குணங்களை ஒழிப்பதே இந்த திருநாளின் குறிக்கோள்.

---

**சுய நலமே ஆசைக்கு மூல காரணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்களும்  கேட்கலாம்

பக்தன்:

சுவாமி! எங்கள் செயல்களுக்கு நாங்களே பொறுப்பு அதன் விளைவுகளில் இருந்து நாங்களே தப்பமுடியாத இந்நிலையில் கடவுள் பக்தி எந்த அளவில் பயனளிக்கும்?

சுவாமி:

இறைவன் எல்லாவற்றையும் படைத்து விட்டு அவற்றை அனுபவிப்பதற்கான முழு சுதந்திரத்தையும் மனிதருக்கு வழங்கி உள்ளார்

ஆனால் அதில் ஒரு நிபந்தனை நீ எதையாவது செய்யலாம் எதையாவது அனுபவிக்கலாம். ஆனால் அதன் பலனிலிருந்து மட்டும் தப்ப முடியாது நீ எதைச் செய்தாலும் அதன் பலனை நிச்சயமாக அனுபவித்தே ஆக வேண்டும்.

எனவே நீ புரிந்த செயல்களுக்கு நீயே பொறுப்பு. நன்மை - தீமை இவை இரண்டும் நீயே செய்தவை· ஆனால் பகவான் பக்தி இது எதற்கு? என்று நீ கேட்கிறாய்.

அதற்கு ஒரு உதாரணம். உனக்கு ஒரு விளை நிலம் உள்ளது. அதில் நீ வெங்காயத்தை பயிர் செய்தாலும் மல்லிகையை வைத்தாலும் அது உன் விருப்பத்தைப் பொறுத்தது

ஆனால் அதற்கான வரியை, நீ அரசாங்கத்திற்கு செலுத்தியாக வேண்டும். வரி செலுத்துவது போல கர்மாவின் பலன்களும் தவிர்க்க முடியாதவை.

அதில் ஒரு முக்கிமான விஷயத்தைக் கவனிக்க வேண்டும் எந்த அளவு வருமானம் உள்ளதோ, அதற்கு ஏற்ப வரி செலுத்த வேண்டும் இது தவிர்க்க முடியாதது.

ஆனால் இங்கு சிறிது வரிச்சலுகை உண்டு அதுதான் வரி விலக்குLIC PROVIDENT FUND இவற்றில் சேமிப்பு வைத்தால அந்தத் தொகைக் கேற்ப வரி விலக்கு கிடைக்கும்.

அதே போல் பூஜை, சேவை, நாமசங்கீர்த்தனம் இவற்றில் நீ ஈடுபட்டால் உன் கர்மாவின் வலிமையில் இருந்து நீ சற்று விடுபடுகிறாய். எனவே கடவுளிடம் பக்தி கொள்வதாலும் கடவுளின் அருளாலும் உனது விதியின் வலிமை குறைகிறது.

பக்தன்:

சுவாமி ! நல்ல தீய செயல்களின் பயன்களை விட்டொழிப்து எப்படி சாத்தியமாகும் ? அதுவும் செயல்களின் பலன்களை இறைவனுக்கு அர்ப்பணித்து விட வேண்டும் என்று சொலகிறீர்கள், அது எப்படி ? நாங்கள் நற் செயல்களைச் செய்வதில்லை அப்படியே செய்தாலும் அவை எண்ணிக்கையிலேயே மிக மிகக் குறைவு ஏதேனும் நற்செயல்கள் புரிந்தால் தானே அவற்றின் பலன்களை அர்ப்பணிப்பதற்கு இயலும் ! அப்படியிருக்கும் போது தீய செயல்களின் பலன்களை இறைவனுக்கு அர்ப்பணிப்பது எப்படி நன்றாகும் ?

சுவாமி:

நன்மை தீமை இரண்டையும் இறைவனுக்கே அர்ப்பணித்து விடவேண்டும் உனது நிலையில் நல்லவை,தீயவை என்கிற பாகுபாடு உள்ளது ஆனால் கடவுளுக்கு அத்தகைய பேதங்கள் இல்லை, இறைவன் இந்த இரண்டு நிலைகளுக்கு அப்பாற்பட்டவன் கங்கையில் எந்த நீர் கலந்து விட்டாலும் அதனால் கங்கை பாதிக்கப்படுவதில்லை. அதன் புனிதத் தன்மைக்கு எந்தக் கேடும் வராது. தீயில் எதைப் போட்டாலும் தீ அதை எரித்துச் சாம்பலாக்கி விடும் அதனால் தீக்கு எந்தப் பாதிப்புமில்லை எனவே நன்மை தீமை இரண்டையும் இறைவனுக்கே அர்ப்பணித்து விட்டால் அதனால் உனக்கு நன்மையே விளையும் இங்கு ஒரு உதாரணம் பாருங்கள்,

உன்னிடம் 500 ரூபாய் நோட்டு இருப்பதாக வைத்துக் கொள்வோம். அது உன் சட்டைப் டையில் இருக்கும் வரை திருடர்கள் திருடி விடுவார்களோ என்ற அச்சம் உனக்கு இருந்து கொண்டே இருக்கும் பணத்தை வங்கியில் நீ சேமிப்பு செய்து விட்டால் நீ நிம்மதியாக இருப்பாய் அதே போல் நல்லதை இறைவனுக்கே அர்ப்பணிக்க வேண்டும்.

> சத்ய உபநிஷதம் என்னும் நூலில் இருந்து தொகுக்கப் பட்டவை.

உன்னிடம் இன்னொரு 500 ரூபாய் நோட்டு உள்ளது ஆனால் அது ஆங்காங்கே கிழிந்து கசங்கி அழுக்கேறிப்போய் உள்ளது அதையுன்னால் எங்கேயும் மாற்ற முடியவில்லை. ரூபாய் நோட்டின் தோற்றம் எப்படி இருந்தாலும் அதில் உள்ள எண்கள் மட்டும் எந்த விதமான பாதிப்பும் இன்றி அப்படியே நீ அதை RESERVE BANK இல் கொடுத்து அதற்கு பதிலாக ஒருநல்ல 500ரூபாய் நோட்டை வாங்கிக் கொள்ளலாம்.

இறைவன் RESERVE BANK போன்றவர் உன்னுடைய தீய செயல்கள்" என்ற அழுக்கேறிய கசங்கிய, கிழிந்த ரூபாய் நோட்டில் பக்தி என்ற எண்கள மட்டும் இருந்துவிட்டால் நீ அதை இறைவனிடம் தந்துவிட்டால் போதும். இறைவன் அதைப் பெற்றுக்கொண்டு உனக்கு நன்மையைத் தந்துவிடுவார். நன்மை தீமை இரண்டையுமே ஏற்றுக் கொண்டு தீமையைக் கூட நல்லதாக்கும் வல்லமை அந்த பகவானுக்கு மட்டுமே உண்டு.

பக்தர்:-

சுவாமி இறைவன் எங்கும் எல்லா உயிர்களிலும் வியாபித்து இருக்கிறார் என்றால் ஏன் ஏற்றத் தாழ்வுகள்? எங்களுக்குள் பேதங்கள்?

சுவாமி:-

''கடவுள் ஒருவனே''! இதில் இரண்டாவது என்பதே இல்லை அவனே எங்கும் எல்லாவற்றிலும் உள்ளான் எனில் ஏன் இவ்வளவு வேறுபாடுகள் இதற்கு ஒரு சிறு உதாரணம்:-

மின்சாரம் ஒன்றுதான். ஆனால் மின் விளக்குகளில் உள்ள ஒளியின் அளவு வேறுபடுகிறது அல்லவா! சில விளக்குகள் ஒளி குறைவாகும் சிலவற்றில் ஒளி சற்று பிரகாசமாகவும் உள்ளது ஏன்? மின் விளக்கு எத்தனை WATT அளவு கொண்டதோ. அதற்கு ஏற்ப அதில் வரும் ஒளியின் அளவும் அமையும்

மின்சாரத்தைப்போல் இறைவனும் ஒருவனே! அந்த பல்புகளைப் போன்றவர் மனிதர் எனவே தான் வேறுபாடுகள், ஏற்றத்தாழ்வுகள்.

பக்தர்:-

ஸ்வாமி ஆன்மீக சாதனையின் பயன்கள் உடனுக்குடன் எங்களுக்கு கிடைப்பதில்லயே, இதுபற்றி என்ன கூறுகிறீர்கள் ?

சுவாமி:-

இங்கு உங்கள் அணுகுமுறை சரியில்லை விஷயங்களைச் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன்.

பிள்ளையை பள்ளியில் சேர்த்து கல்வியை ஆரம்பித்து வைக்கிறீர்கள். அப்படியே தொடர்ந்து 10ம் வகுப்பு 12ம் வகுப்பு, BA, BSE, BCOM போன்ற பட்டப் படிப்பு வரை எத்தனை ஆண்டுகள் பிடிக்கின்றன. எவ்வளவு கஸ்டப்பட்டு படிக்க வேண்டும். இந்த உலகியல் கல்விக்கே இத்தனை கஸ்டம் என்றால் நித்திய, சத்தியமாகிய அழிவில்லாப் பேரொளி அந்தப் பரம் பொருளை நாடிச் செல்கின்ற சாதனைகளுக்கு எவ்வளவு காலம் பிடிக்கும் எவ்வளவு கடுமையான உழைப்புத் தேவைப்படுகின்றது எனவே பலன்கள் உடனுக்குடன் கிடைக்க வேண்டும் என்று எண்ணுவது தவறு.

இப்பத்திரிகை மானிப்பாய் பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தினால் கே. கே. எஸ். வீதி பூநாறிமரத்தடி
ஸ்ரீ சாயி அச்சகத்தில் அச்சிடப்பெற்று 10-10-1998 வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org